பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர்ஆண்டு2026ஐப்பசி08 புதன்கிழமை (25-10-995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 337

பொஸ்னியா, றுவாண்டா போன்று

# போர் நீதிமன்றம் அமைத்து சந்திரிகாவை விசாரிக்குக!

## ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர்

லண்டன், ஒக்ரோபர் 25

பொஸ்னியா, றுவாண்டா ஆகிய நாடுகள் தொடர்பாக போர் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டது போன்று —

ஜனாதிபதி சந்திரிகா அரசாங்கம் நடத்திய போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கு ஸ்ரீலங்காவுக்கென போர் நீதிமன்றத்தை நிறுவி —

அந்த நீதிமன்றத்தில் சந்திரிகாவை விசாரிக்க வேண்டும்.

அமெரிக்கா, கனடா வாழ் தமிழர்கள் சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பிய மகஜரில் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும் கனடாவிலும் வாழும் தமிழர்களில் 6,000 க்கும் அதிகமானோர் சேர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை— நியுயோர்க்கில் ஐ நா. சபைக்கான இலங்கைத் தூதுக்குழுவின் அலுவலகத்துக்கு முன்னால்— ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்—ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மீதான இறுதித் தாக்குதல் இன்னும் சில தினங்களிலாம்

### கொழும்பில் கேடுகள் முடியும் வரை

மணிலா, ஒக். 25

யாழ்ப்பாணத்தின் மீதான இறுதித் தாக்குதல் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படும் என்ற இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக வெரிததாஸ் வானொலி கூறியது.

ஆனால் இறுதித் தாக்குதலுக்கு நிச்சயிக்கப்பட்ட திகதியை வெளியிடுவதற்கு அவர் மறுத்துவிட்டார் என்றும் அந்த வானொலி மேலும் கூறியது.

12 வருட காலப் போரை தங்களின் இறுதித் தாக்குதல் முடிவுக்குக் கொண்டு வரும் என்று கூறிய அந்த இராணுவ அதிகாரி —

யாழ். நகரைக் கைப்பற்ற நடத்தப்படும் இறுதி மோதலில் அரச படையினர் தரப்பிலும், விடுதலைப் புலிகள் தரப்பிலும் பெரும் இழப்புகள் இடம் பெறும் என்பதனையும் — எடுத்துச் சொன்னாராம்.

வலி - கிழக்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் —

இராணுவத்தின் மூன்று

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மீதான தாக்குதல்; தாமதம் அடையக்கூடுமாம்

கொழும்பு, ஒக். 25

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளை தேடும் நடவடிக்கை பூர்த்தியாகும் வரை—

யாழ்ப்பாணம் மீதான இறுதித் தாக்குதல் தாமதம் அடையக்கூடும் என கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் நம்புவதாக வெரித்தாஸ் சிங்களச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகரில் விடுதலைப் புலிகளைத் தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-6)

## மாவுடன் "ஹபரண" வெள்ளி வரும்

யாழ்ப்பாணம், ஒக். 25

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 950 மெற்றிக் தொன் மாவுடன் 'ஹபரண' கப்பல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள இக்கப்பலை மனிதாபிமான அடிப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## 17 படையினர், ஓர் அதிகாரி திங்கள் தாக்குதலில் பலி

### 42 இராணுவத்தினர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25

'சூரியபிரகாசம்' இராணுவநடவடிக்கை மூலம் இராணுவத்தினர் ஆக்கிரமித்த பகுதிகளில் அமைந்துள்ள முன்னணி வலயம் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரிகள் பலவற்றில் நிரம்பி வழியும் படையினர்!

கொழும்பு, ஒக். 25

''சூரிய பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்த படையினருக்கு சிகிச்சை அளிக்க இராணுவ ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பல பொது வைத்தியசாலைகளில் படையினர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பலாலி, அனுராதபுரம் இராணுவ ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிவதால் காயமடையும் படையினர் வவுனியா பொதுவைத்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## சண்டை தணிந்த போதும் ஷெல்லடி ஓயவில்லை

யாழ்ப்பாணம், ஒக் 25

வலிகாமம் கிழக்குப் பகுதியில் நேற்று சண்டை தணிந்திருந்த போதும் படையினரின் ஷெல் தாக்குதல் ஓயவில்லை

நேற்றுக் காலை ஓரளவு அமைதி நிலை நிலவியது. நண்பகலுக்குப் பின் ஷெல் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது

கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, உரும்பிராய், கோண்டாவில் பகுதிகளில் ஷெல் குண்டுகள் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன. கோப்பாய் வயல்வெளிப் பகுதியில் அதிகமான ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதேவேளை நேற்று முற்பகல் 11 மணியளவில் ஹெலி ஒன்று இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்கு மேலாக வட்டமிட்டுச் சென்றது.

[ஓ-15-13-154]

## நீர்வேலி, சிறுப்பிட்டிக்குச் சென்று கண்ணீர் மல்க திரும்பி வந்த மக்கள்

### வீடுகள் பலவும் சேதம்; பெருமளவு உடைமைகள் நாசம்

யாழ்ப்பாணம், ஒக். 25

நேற்று சண்டை தணிந்திருந்ததால் நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளுக்குச் சென்ற மக்கள் பலரும் அங்கு தாம் கண்ட அழிவுகளைத் தெரிவித்து கண்ணீர் வடித்தனர்.

அங்கு ஏராளமான வீடுகள் ஷெல் வீச்சினால் சேதமாகிக் கிடப்பதாகவும் பயிர் வகைகள் மற்றும் உடைமைகள் பலவும் ஷெல்லுக்கு இலக்காகி எரிந்தும் சேதமடைந்தும் காணப்படுவதாகவும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது:-

கால்நடைகள் பலவும் கட்டிய இடங்களிலேயே இறந்து கிடக்கின்றன. அதனால் துர்நாற்றம் வீசுகிறது.

பெருமளவு வாழைகள் முறிந்தும் கருகியும் காணப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். மக்கள் அவலப்படுகின்றனர்; அரச அதிபருக்கு அவசரச் செய்தி

யாழ்ப்பாணம், ஒக். 25

''குடாநாட்டு மக்கள் அவல வாழ்க்கை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று கொழும்பில் தமிழ் யுனிசெ யாழ். அரசஅதிபருக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக் குழு மூலமாக நேற்று அவசர செய்தி ஒன்றை அரச அதிபருக்கு அனுப்பிவைத்தார். அச்செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

★ வலி - கிழக்கு, மற்றும் கோண்டாவில், திருநெல்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CONGRATULATIONS

We Congratulate our Principal

**MISS C. V. SELLIAH**

on her succes in obtaining her Doctorate at the University of Jaffna.

— Commerce Union —

**Uduvil Girls' College.**

(39109)

# யாழ். நகர, நல்லூர் பகுதி கடைகளுக்கும் பாண்!

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். நகரப் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நிலவும் பாண் தட்டுப்பாடு இன்று முதல் நீங்கும் எனச் செயலக திட்டப் பணிப்பாளர் நேற்றுத் தெரிவித்தார்.

இவ்விரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் நிலவும் பாண் தட்டுப்பாடு குறித்து பாண் உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள பேக்கரிகளுக்கு கூடுதலான மாவை வழங்கவும் —

பேக்கரிகளில் வைத்துப் பாண் விற்கும் தற்போதைய நடைமுறையை மாற்றி சகல கடைகளுக்கும் பாண் வழங்கவும் — இணக்கம் காணப்பட்டதாக திரு. பத்மநாதன் தெரிவித்தார்.

இப்புதிய நடைமுறை இன்று முதல் செயற்படுத்தப் படுவதால் பாண் தட்டுப்பாடு நீங்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

(அ-3)

## அதிபர் கூட்டம்

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [இ]

## தவறிவிட்டது

727440895 V இலக்கமுடைய அடையாள அட்டையும், சிறு தொகைப் பணமும் அடங்கிய "பேர்ஸ்" ஆனைக்கோட்டை - ஆடி வைரவர் கோவிலுக்கும், ஓட்டுமடம் ஐந்து சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து T. சிவகுமாரன், உதயன் பணிமனை, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் தரப்படும்.

(39133)

# கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டியும்



| தோற்றம்: (மலேசியா) | மறைவு: (இலங்கை) |
|---|---|
| 14 — 01 — 1925 | 25 — 09 — 1995 |

அமரர்

## இராமலிங்கம் இரத்தினசிங்கம்

திதி: 25 - 10 - 1995

அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த அப்பாவே எங்களை ஆளாக்கி வழிநடத்திய நீங்கள் அப்பா அப்பா! என்று நாம் அழைக்கையில் பாலைப் பருகிய நீங்கள் திடீரென்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு நிலையான வாழ்வு தேடி ஈசன் பாதம் அடைந்தீரே.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி நிற்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"கூல் ஹவுஸ்"
டச் றோட்,
உடுவில்

(39128)

## வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி அதிபர்

**செல்வி C. V. செல்லையா**

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

கலாநிதி

பட்டத்தைப் பெற்றமைக்காக அவரை வாழ்த்துகின்றோம்.

இவர் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முதல் பெண் கலாநிதி எனும் பெருமையைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

— ஆசிரியர்கள், மாணவர்கள்.
உடுவில் மகளிர் கல்லூரி

(39125)

## இன்று நடைபெறும் கலந்துரையாடல்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட அதிபர், உப அதிபர்கள் அனைவரையும் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ள முக்கிய கலந்துரையாடலில் பங்கேற்கும்படி சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 25

உடுவில் பிரதேசத்துக்கான விவசாய உற்பத்தி இலக்கினைத் தீர்மானிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று (புதன்) காலை 10 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் பிரதேசச் செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த சகல கிராம அலுவலர்கள், உற்பத்திக்குழு உறுப்பினர்கள், சமநலசேவை, விவசாயத் திணைக்களப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துரையாடலில் பங்கு பற்றும்படி கேட்கப்பட்டுள்ளது. [ஓ]

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
(1) 2x9 (வ - து) சுன்னாகம். 18/25/9 36/450

## முக்கிய அறிவித்தல்

1) கிளை இல. 20, 22 என்பன கொக்குவில், நந்தாவில் அம்மன் கோயில் வீதியில் 86 ஆம் இலக்கக் கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். குறித்த கிளையின் பாவனையாளர்கள் தங்கள் பங்கீட்டுப் பொருள்களை அங்கு பெற்றுக்கொள்ளலாம்.

2) 27 வது சுற்று மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ளாத கிளை இல. 1, 2, 3, 18, 19ன் பாவனையாளர்களின் வசதிக்காக மண்ணெண்ணெய் இணுவில் சந்தியில் இருக்கும் கிளை இல. 13 இல் வைத்து விநியோகிப்பதற்கு தற்காலிகமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

— பொது முகாமையாளர்.

24-10-95 (சி-2529)

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 17 — 04 — 1923 | 25 — 10 — 1994 |

## அமரர் R. D மயில்வாகனம்

(பொடித்தம்பி)

(Retired Valuation Inspector)

திதி: 13—11—1995

அன்புருவே அப்பா நின்
அழகுமுகம் காணாது
இன்றுடனே ஓராண்டை
ஏக்கமுற்றே கழித்திட்டோம்
குன்றின் மேலிட்ட
விளக்காகி நீர் வைத்தீர்
நன்றே நம் வாழ்வை
நாமிதனை மறப்போமா
அப்பா நின் ஆன்மா
ஆண்டவனின் அடியதனில்
எப்போதும் இன்புற்று
இருக்கவென நாம் வணங்கும்
அப்பன் குலனையான்
அருள் வேண்டி வணங்குகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

ம குகன்,
மயிலை, வரணி.

(39...)

உ
ஓம் முருகன் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் யுவ வருடம் ஐப்பசி மாதம் 8ஆம் திகதி (25-10-1995) புதன் கிழமை முற்பகல் 9-38 மணிமுதல் 11-09மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புதல்வன் திருநிறை செல்வன் **பிரபாகரன்** (ராசன்) (ஓம் முருகா கடைச்சல் தொழிலகம்) அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி **ரஞ்சிதவதனி** (வதனி) அவர்களுக்கும் |
|---|---|

திருமணம் செய்து வைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று நல்லூர் சிவன் ஆலயத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வியாழன் பி. ப. 4மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திரு. சி கனகரத்தினம் ஆச்சாரி (தம்பதிகள்) (யாழ். டச்சு மோட்டர்ஸ்) 21/1, ஓட்டுமடம் வீதி யாழ்ப்பாணம். | திரு. கா. பேரம்பலம் (மார்க்கண்டு) ஆச்சாரி (தம்பதிகள்) 134, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர். |

(இருவீட்டார் அழைப்பும்)

(39055)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு சேதங்கள் ஏற்பட்டாலும் நிலைமையை எதிர்நோக்கத் தயார்!

## இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 25

தற்போதைய யுத்தத்தில் படையினருக்கு சேதங்கள் ஏற்பட்டாலும் படையினர் எதனையும் எதிர்நோக்கத் தயாராகி இருந்து வருகின்றனர்.

நாங்கள் இப்பொழுது யாழ்ப்பாணத்தில், அதாவது யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கிறோம். யாழ்ப்பாண நகரும் எம்மிடமிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பது பிரச்சினை இல்லை. நாங்கள் மற்ற இடங்களைப் போன்று யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் நோக்கத்துடன் இருக்கிறோம்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க பி. பி. ஸிக்கு 23 ஆம் திகதி அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

பேட்டியின் சில பகுதிகள் வருமாறு:

கேள்வி: நீங்கள் யாழ். நகரத்தை நோக்கி முன்னேறுகிறீர்கள். இது சரியா?

பதில்: நாங்கள் இப்பொழுது வலிகாமம் பிரதேசத்தில் இருக்கிறோம். யாழ்ப்பாண நகரமும் வலிகாமம் பிரதேசத்தில் உள்ளது. ஆனால் நாங்கள் அந்தத் திசையில் (நகரத்தை நோக்கி) முன்னேறுகிறோம் என்று அர்த்தம் இல்லை. நாங்கள் கிழக்கே செல்லலாம், மேற்கே செல்லலாம், தெற்கே செல்லலாம். இந்த மூன்று திசைகளிலும் நாம் செல்ல முடியும்.

கேள்வி: முழுயாழ்ப்பாணக் குடாநாட்டையும் நீங்கள் கைப்பற்ற எவ்வளவு காலம் பிடிக்கும்?

பதில்: சற்றுக்காலம் எடுக்கலாம். ஏனென்றால் நாங்கள் தெரிந்தெடுத்த சில இலக்குகளைத் தாக்குகிறோம். விடுதலைப் புலிகள் செறிந்துள்ள இடங்கள். இவற்றுக்கு அண்மையில் இப்பொழுது பொது மக்கள் வசிக்கவில்லை.

கேள்வி: யுத்த நிலைமை இப்பொழுது எப்படி?

பதில்: இரண்டு தரப்பிலும் சேதங்கள் உண்டு. ஆனால் நாங்கள் திறம்படச் செயற்படுகின்றோம்.

கேள்வி; உங்களுக்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்க்கும் போது நீங்கள் எவ்வளவு காலம் இந்தப்போரை நடத்த முடியும்?

பதில்: நாங்கள்தொடர்ந்து போரிட முடியும். நிலைமையை எதிர்நோக்க நாம் தயாராகவேஇருக்கின்றோம்.

கேள்வி: அப்படி என்றால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இராணுவம் முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறது?

பதில்; யாழ்ப்பாணம் மட்டும் அல்ல, வடமாகாணப் பெருநிலத்தையும் கிழக்கு மாகாணத்தையும் நாம் முழுதாகக் கைப்பற்ற வேண்டும். விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டும்.

கேள்வி: இந்த நடவடிக்கையில் பல பொதுமக்கள் பாதிக்கப்படலாம் இதனை ஒட்டி ஏதேனும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்: கூடியபட்ச முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன; நாங்கள் கேட்டுக் கொண்டபடி பொது மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்துள்ளார்கள். கடந்த ஐந்து ஆறு நாள் சண்டையில் யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் எவரும் இறக்கவில்லை.

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட முந்திய தாக்குதல்களுக்கும் இதற்கும் இடையில் வித்தியாசம் உண்டா?

பதில்: எந்த வித்தியாசமும் இல்லை எல்லா இராணுவ நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கும் நோக்கத்தைக் கொண்டவையே ஆகும். [இ-க]

## யாழ். நகரைப் பிடிக்க அதிக துருப்புகள் தேவை

### ஏ. எவ். பி. செய்தியாளர் கருத்து

கொழும்பு, ஒக் 25

தற்போது வடக்கே இராணுவம் நிற்கும் இடம் யாழ். நகருக்கு அண்மையில் உள்ளதாயினும், அதனை அடைய பெருந்தொகையான துருப்புக்கள் தேவைப்படுவர்.

இவ்வாறு ஏ எவ். பி செய்தியாளர் அமால் ஜயசிங்க பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் என கருத முடியாது.

ஏற்பட்ட பாரிய இழப்புகளை வைத்துப் பார்க்கையில் அடுத்த சில தினங்களில் இராணுவம் யாழ் நகரை சென்றடையும் என்பது சாத்தியமாகாது எனினும் இராணுவம் கடும் சமரில் ஈடுபட்டுள்ளது என்பது தெரிகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். [இ-எ]

## குடாநாட்டில் மீண்டும் வயிற்றோட்ட நோய்

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். குடாநாட்டில் மீண்டும் வயிற்றோட்ட நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் இந் நோய் மேலும் பரவுவதற்கான வாய்ப்புகளே அதிகம் எனவும்—

மக்கள் மிக அவதானத்துடன் சுத்தம் பேணி சுகாதாரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும்— வைத்திய வட்டாரங்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

கடந்த நாலு நாட்களுக்குள் 10 பேருக்குமேல் யாழ். ஆஸ்பத்திரியில் வயிற்றோட்ட நோய் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றும் இணுவில் பகுதியிலிருந்து இராசரத்தினம் அருந்தினி (வயது 16) என்ற இளம் பெண் இந்நோயினால் பீடிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் தெல்லிப்பழையில் இருந்து இணுவிலுக்கு இடம் பெயர்ந்தவராவார். [இ-15]

## பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் மாணவர்கள்

கொழும்பு, ஒக்.25

அடுத்த ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தற்சமயம் 9 ஆயிரத்து 400 பேர் வருடாந்தம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

அடுத்த ஆண்டு இது 15 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

அட்டாளைச்சேனையில் இலங்கையின் 9ஆவது தேசிய பல்கலைக்கழகத்தின் அங்குரார்ப்பண வைபவம் 23 ஆம் திகதி நடைபெற்ற போது அங்கு உரையாற்றிய கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரான இந்த விவரங்களைத் தெரிவித்தார். (இ-க)

## வடபகுதிக்கான 300 தபால் பொதிகள்

### கப்பலுக்கு காத்திருக்கின்றன

யாழ்ப்பாணம், ஒக். 25

கொழும்பு மத்திய தபால் தரம்பிரிக்கும் நிலையத்தில் உள்ளூர் தபால்கள் அடங்கிய 300 தபால் பொதிகள் தற்போது சோதனையிடப்பட்ட நிலையில் வடபகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு கப்பல் வசதிக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேலும் வெளியூர் தபால்கள், பதிவுத் தபால்கள் அடங்கிய 300 தபால் பொதிகள் சோதனை [illegible] யில் மத்திய தபால் தரம் பிரிக்கும் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. கப்பல் போக்குவரத்து சீராக நடைபெறின் அடுத்த மாதத்திறுதிக்குள் கொழும்பில் தேங்கியுள்ள அனைத்து தபால் பொதிகளையும் அனுப்பி வைக்க முடியும் என்றும் —

தொடர்ந்தும் இவ்வாறு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மத்திய தபால் தரம்பிரிக்கும் நிலைய தபால் அத்தியட்சகர் உறுதியளித்துள்ளதாக கொழும்பிலிருந்து திரும்பியின்ன பதில் வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. சு. மாணிக்கவாசகர் தெரிவித்தார். [க-4]

## சூரபன்மனின் வரலாறு - 2

கைலயங்கிரியின் ஒரு புறம் மயிலும் சேவலும் உலாவித் திரிந்தன. தமது தலைப் பயனை அழித்த கருடனையும் அன்னத்தையும் பழி தீர்க்கத் தருணத்தை எதிர் பார்த்திருந்த பூதகணத் தலைவர்கள் மயிலின் அருகில் சென்று ''ஓ பட்சி அரசே சிவகுமாரரான முருகப் பெருமானின் திருவடித் தாமரைகளைத் தாங்கும் தகுதி பெற்ற உனது வல்லமையையும் கொடியாகிய கோழியின் பராக்கிரமத்தையும் அறியாதவர் உலகங்களில் யார் உளர்? விட்டுணுவும் பிரமாவும் உங்களைப் போற்றி நிற்கின்றனர். ஆனால் அவர்களுடைய ஊர்திகளாகிய கருடனும் அன்னமும் உங்களை அலட்சியம் செய்கின்றன. அவ்வாறு அவர்கள் அவமதிப்பது உங்களுடன் சண்டையிடப் போலும். அவர்கள் உங்களுடன் சண்டையிட வந்தால் நாம் உங்களுக்குத் துணையாக நிற்போம்'' என்றனர்.

பூதகணத் தலைவர்கள் சொன்னவற்றைக் கேட்ட மயில் கோபம் கொண்டு சிறகுகளை அடித்து ஆரவாரம் செய்து கருடனுடன் போர் செய்யத் தயாராகியது. சேவல் கூவிப் பறந்து அன்னத்தை நெருங்கியது. பூதகணத் தலைவர்களும் கண்களில் கோபக்கனல் பறக்கப் பற்களை நறநறென்று கடித்துப் போருக்குத் தயாராயினர்.

போரில் தோல்வியடைந்த கருடன் வைகுந்த உலகத்திற்கு ஓடி மறைந்தது. அன்னம் சத்திய உலகுக்குப் பறந்து சென்று பதுங்கிக்கொண்டது. அவைகளைத் துரத்திச் சென்ற மயிலும் கோழியும், பூதகணத் தலைவர்களும் வைகுந்தம், சத்திய உலகம் பொன்னுலகம் ஆகியவற்றை அழித்துவிட்டுக் கயிலையங்கிரிக்கு மீண்டன.

தேவர்களின் முறையீட்டைக் கேட்ட விட்டுணுவும் பிரமாவும் கவலையடைந்து முருகப்பெருமான் திருமுன் சென்று ''ஐயனே காரணம் எதுவுமின்றிப் பூதகணத் தலைவர்களும் மயிலும் கோழியும். எமது ஊர்திகளுடன் போரிட்டனர். தோல்வி அடைந்த கருடனும் அன்னமும் புறங்காட்டிப் பறந்தோட இவர்கள் வைகுந்தத்தையும் சத்திய உலகையும் அமராவதியையும் அழித்துவிட்டார்கள்'' என்று கூறினர்.

பூதகணத் தலைவர்களைத் தம்முன் அழைத்த முருகப் பெருமான் ''நீங்கள் வைகுந்தத்தையும் சத்திய உலகையும் அமராவதியையும் அழித்தீர்கள். இதனால் உங்களை அடைந்த பழியும் பாவமும் நீங்கும் பொருட்டுப் பூவுலகத்திலே அசுரர் குலத்திற் பிறந்து தேவர்களுக்குத் துன்பம் செய்யக்கடவீர்கள். அதன் காரணமாக நமது வேற்படை உங்களைச் சம்காரம் செய்து நல்வழிப்படுத்தும் என்று சாபமிட்டார்.

கொடிய சாபத்தைக்கேட்ட பூதகணத் தலைவர்கள் ''தேவரீரின் வேற்படையால் நாம் இறக்கும் போது மயிலுருக்கொண்டு தங்களைத் தாங்கும் பேற்றையும் சேவல் உருக்கொண்டு கொடியாகிக் கூவும் பெருமையையும் தந்தருள வேண்டும்'' என்று இரந்தனர். அவ்வண்ணமே ஆகும். என்று அருள் புரிந்தார் ஆறுமுகப்பெருமான். ★

### கந்தபுராணக் காட்சி (2)

மூளாய் அருணாசலம்

## வித்தாரம்

சிரிச்சுக் கொண்டு வாறீர்" அறிவழகா, என்ன விஷயம் ...?

"'சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை சூரியகிரகணம் வாறதுக்கு முந்தியே மங்கிப் போச்சுது என்டு நினைச்சுச் சிரிக்கிறீரோ ...

ஞாயிற்றுக்கிழமை உவை முழங்கின இடிமுழக்கத்துக்குப் பிறகு திங்கட்கிழமை பகல் முழுவதும் ஓஞ்சு போயிருந்தினம். முந்தநாள் நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறகு நாலு மூண்டு ஷெல் முழக்கங்கள் கேட்டுது ... அதுக்குப் பின்னர் பெரிசா கேட்கயில்லை ...

ஞாயிற்றுக்கிழமை அச்செழுவிலை இருந்து முன்னேற முயலும்போது அவை நல்லா வாங்கிக் கட்டியிருக்கினம். கவச தளபாடங்களை மட்டுமில்லை பெரும் எண்ணிக்கையான ஆமிக்காரரையும் இழந்து விட்டினம்.

முழுப் பூசணிக்காயை சோற்றிலை மறைக்கிறது கஷ்டம் என்டு நினைச்சுப் போல, இரண்டு அதிகாரிகளும் 27 துருப்புக்களும் செத்ததாக அறிவிச்சினம். உண்மையிலை அந்த நம்பர் கூடவாகத்தானிருக்கும்...

செய்தித் தணிக்கையை கவசமாகப் போட்டுக் கொண்டு, போர்க்கள இழப்புகளையும், தோல்விகளையும் வெகு கெட்டித்தனமாக அரச தரப்பு மறைச்சு வருகுது.

சின்ன உதாரணம் சொல்லுகிறன் கேளும். சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கையிலை இறந்த துருப்புக்களின் எண்ணிக்கை குறித்து செய்தி ஏஜன்சி ஒன்றின் பிரதிநிதி இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்காவிடம் கேட்டார்...

அதற்கு அவர் எண்ணிக்கை விவரம் தன்னிடம் கையில் இல்லை என்டும், முன்னுக்கே அறிக்கை விட்டாச்சு என்டும் சமாளிச்சார்.

சரத் முனசிங்காவின் பிரதான வேலையும் ராணுவம், இராணுவ நடவடிக்கைகள் குறித்து செய்தியாளர்களுக்குத் தகவல் கொடுப்பது தான்... அப்படியிருக்க விவரம் கையில் இல்லையென்டால் என்ன கருத்து...?

பொய்கள் திட்டமிட்டு எழுத்தில் வடிக்கப்பட்டு அவற்றைப் பார்த்துத்தான் முனசிங்கா கூறுகிறார். சொந்தத்தில் சொல்ல வந்தால் அவரை அறியாமலே உண்மை வந்துவிடும் என்ட பயம் தான்.. !

போர் நிலைமை பற்றி மட்டுமே அரசாங்கம் பொய் சொல்லுது......? எல்லா விஷயங்களிலையும் தான்... கொழும்பிலை எண்ணெய்க் குதங்கள் எரிஞ்சது குறித்துக் கூட அரசு பொய்யினைத் தானே சொல்லுது...

சேத விவரம், எரிபொருள் கையிருப்பு, எண்ணெய்க்குதம் எரிஞ்சதாலை ஏற்பட்ட பற்றாக்குறை நிலை, குழப்ப நிலை குறித்து அதிகாரிகள் ஒருவருக்கு ஒருவர் முரணான தகவல்களை ஒவ்வொரு பக்கத்தாலை சொல்லிக் கொண்டிருக்கினம்......

உவையளை நினைச்சா சிரிப்புத்தான் வருகுது. தங்களைத் தாங்களே ஏமாத்துகினம்; பாவங்கள் !

அறிவழகா! சூரியப் பிரகாசம் மங்கிவிட்டதாக நீர் சிரிச்சுக்கொண்டு வந்திர்... ஆனால் அதனைத் தாங்கள் நிறுத்தப்போவதில்லை என்டெல்லே ஆமி தரப்பார் சொல்லுகினம்... மழையைப் பற்றித் தங்களுக்கு அக்கறை இல்லையென்டும் சொல்லுகினம்......!

இடரெண்டு நிலவொளி என்ட பேரிலை புதிசாக ஓர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிச்சாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை...

— கொண்டோடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பழைய ஓடுகள், மரங்கள், நிலைகள், யன்னல்கள் தூண்கள் கொங்கிறீற் கற்கள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. கிருஸ்ண ராஜா, 190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (39101)

Honda MB - 100 மோட்டார் சைக்கிள், என்பீல்ட் நீர் இறைக்கும் இயந்திரம் (புதியது) தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 127/1, கோவில் வீதி, நல்லூர். (39122)

Iron Safe (அயன் சேவ்), Iron Indoor gate, [இரும்பு உள்கதவு] 7 அடி x 2½ அடி, கடை மேசை, புலித்தோல் [பதனிடப்பட்டது] முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: புதிய இல. 608, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [39097]

## மலிவு விற்பனை

நல்ல இனப்பன்றிக் குட்டிகளும், இறைச்சிக்குரிய பன்றிகளும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், செவ்விளநீர் நாற்றும் விற்பனைக்குண்டு அண்ணா பாம், இணுவில். (சி-2527)

## பாதுகாப்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

பருத்தித்துறை ஜே/403, தும்பளை ஜே/404, தும்பளை கிழக்கு ஜே/405, கற்கோவளம் ஜே/406 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தோர் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் சமுகமளித்து தமது தேசிய பாதுகாப்பு நிதிப் பங்களிப்பைச் செலுத்தலாம் என தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர். [எ]

## நீர்வேலி பிரதேசசபை இடம் மாற்றம்

வலி. கிழக்கு நீர்வேலி பிரதேசசபை இன்றுபுதன்கிழமை முதல் நல்லூர் பிரதேசசபை கட்டடத்தில் இயங்கவுள்ளது.

சகல உத்தியோகத்தர்களையும் நல்லூர் பிரதேசசபை அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு செயலாளர் மு. க. குணபாலசிங்கம் கேட்டுள்ளார். (இ)

## கலந்துரையாடல்

தென்மராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களின் கலந்துரையாடல் நாளை வியாழன் மாலை 3.00 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கா. த. சிவபாதம் தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.

போலியோ சம்பந்தமாக மேற்படி நிறுவனங்களின் ஊக்குவிப்பு ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடப்படும். (இ-18)

## கொலன்னாவை நீர் விநியோகம் பாதிப்பு

கொலன்னாவ பிரதேச செயலகப் பகுதியில் உள்ள பிரதான நீர்க்குழாய் இனந்தெரியாதவர்களால் முடப்பட்டது.

இதனால் அப்பகுதி நீர்விநியோகம் ஞாயிறன்று பாதிக்கப்பட்டது. (இ-3)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1996

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1995 டிசம்பர் 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

01. எழுதும் பொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் — மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்ரீல் அலுமாரி, கபினட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன
06. சகல வகையான ஹார்ட்வெயார் பெயின்டுகள், வானிஸ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09 வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச் சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப் பொருள்களும் கண்ணாடிப் பொருள்களும்
12. மரம்
13. கட்டடப் பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புக்கள்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள். சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துகள் முதலியன
22. பைப்புகள், பைப் இணைப்புகள்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருள்கள், சீனாப்பொருள்கள் கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

### சேவைகள்

1. அச்சிடுதல், புனைச் செய்தல், றப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்.
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்.
3. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும், பராமரிப்புகளும்.
4. உசக் தளபாடங்களும், திருத்த வேலைகளும்
5. மரத்தளபாடங்களுக்கான திருத்தவேலைகள்
6. கதிரைகள் பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகள் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர் பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் "பைண்டிங்" செய்தல்

### எந்திரனியல் சேவைகள்

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. மின்மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
3. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்தவேலைகளும்)
4. மின்சார வயறிங் வேலைகள்
5. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/திருத்த வேலைகள்
6. இரும்பு கிறில்கள் / கேற்றுகள் உருவமைத்தல்/ பொருத்துதல்
7. கட்டடங்கள்/கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றிற்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத் தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்
9. படவரைதல் (புளு பிறின்ரிங் றோயிங்ஸ்)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள்/சேவைகள் – 1996" எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு ... முகவரியிடப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் / சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்களை கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்களை சேவை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. பங்குதாரர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்
8. ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம் (8இற்கு மட்டும்)

குறிப்பு:

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

அ) ICTAD தரப்படுதலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோ பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி) இணைக்கப்பட வேண்டும்.

ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம்மாவட்டத்தில் உள்ள தமது கிளை/ பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர் கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (7 இற்கு மட்டும்) தருக.

– பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-2494)

# வட இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி

சிறுப்பிட்டி — உரும்பிராய் (கிளை)

## மாணவர்க்கு

உங்கள் பயிற்சிநெறி சம்பந்தமாக எதிர்வரும் 27—10—1995 காலை 9.30 மணிக்கு

14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்திலுள்ள எமது கல்வி நிறுவனத்துக்கு வருமாறு அன்புடன் கேட்கிறோம்.

– நிர்வாகி.

(சி-2528)

# ACCOUNTANCY EXAMS MAY - JUNE 1996

C. I. M. A. Stage I
I. A B. சகல பிரிவுகளும்

ஆரம்பம்: 28 - 10 - 1995

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane,
JAFFNA.

(சி-2477)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## ஐ. நா. சபையில் விஷமத்தனம்

ஐக்கிய நாடுகள் சபையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி அச்சபையின் சிறப்புக் கூட்டத்தொடர் நியூயோர்க்கில் கடந்த மூன்று நாள்களாக நடைபெற்றது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் அதிர்ஷ்டவசமாக சிறப்புக் கூட்டத்தொடரில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது.

அனைத்துலக அரங்கம் ஒன்றில், உள்நாட்டுப் பிரச்சினை குறித்து "அழுதவடியும்" தன்மையினதாகவே சந்திரிகாவின் பேச்சு அமைந்தது. இது வழமையான நடைமுறையிலிருந்தும் மாறுபட்டதாகும்.

உள்நாட்டுப் பிரச்சினை குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் ஏதாவது சொல்லிவிடவேண்டும் என்ற எண்ணம் சந்திரிகாவுக்கு வந்தது ஏன்?

அதுவும் தமது பேச்சின் கணிசமான பகுதியை தமிழீழ விடுதலைப் புலிகளை மறைமுகமாகக் கண்டிப்பதற்குச் செலவிட்டது ஏன்? புலிகளின் பெயரைக் குறிப்பிடாமல் அவர்களைப் பற்றிய பாதகமான எண்ணத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியில் இறங்கியது எதற்காக?

இப்பிரச்சினையை சமாதானமாக, சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் தமக்குள்ள இயலாமையையும் அரசியல் பலவீனத்தையும், துணிச்சல் இன்மையையுமே அவரது பேச்சு பிரதிபலிக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர்களின் விடுதலைப் போராட்ட அமைப்பு என்று உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள பதிவை அழிப்பதே சந்திரிகாவின் பேச்சின் இலக்கு.

தமிழர்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாணும் தமது திட்டத்துக்கு —

தமிழர்களை இனப்படுகொலை செய்த பின்னர், நியாயமற்ற தீர்வு ஒன்றைத் திணிக்கும் தமது திட்டத்துக்கு — விடுதலைப் புலிகள் தடையாக — சவாலாக — இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டதாலேயே, அவர்களுக்கு உலக நாடுகளிடம் கறுப்புப் புள்ளியை வாங்கிக்கொடுக்க சந்திரிகா முயன்றிருக்கிறார்.

விடுதலைப் புலிகளைத் தம்மால் தனியத் தோற்கடிக்க முடியாது: உலக நாடுகளின் ஆதரவையும் பெற்றால்தான் அது சாத்தியம் என்றும் ஜனாதிபதி உணர்ந்திருக்கிறார்.

அதனாலேயே சர்வதேச அரங்கொன்றில் அவர்களைக் கொச்சைப்படுத்தும் மூன்றாந்தர முயற்சியில் இறங்கி இருக்க வேண்டும்.

விடுதலைப்புலிகளை தமிழர்களின் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டுதான், சந்திரிகா அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்தினார்.

சந்திரிகா இராணுவ நலன்களை முன்னிறுத்தி வலியுறுத்தியதனால் தான் பேச்சுக்கள் முறிந்தன. அந்த உண்மையை அவர் மறைத்துவிட்டார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதம் புரிவதாகக் கூறும் சந்திரிகா, அரசாங்கம் தனது படைகள் மூலம் தமிழ் மக்கள் மீது புரியும் பயங்கரவாதத்தைக் கூற மறந்தது ஏன்?

மொத்தத்தில், இனிமேல் விடுதலைப் புலிகளுடன் பேசுவதில்லை என்ற ஒரு முடிவுடனேயே இந்த விசமத்தனத்தில் அவர் இறங்கியிருக்கிறார் எனலாம்.

'சூரியபிரகாசம்' நடவடிக்கை:

## இடம்பெயர்ந்த மக்களுக்கு இரு வார உலர் உணவு

யாழ்ப்பாணம், ஒக். 25

வலி கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள 'சூரிய பிரகாசம்' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உடனடியாக இருவார உலர் உணவு வழங்கப்பட இருக்கிறது.

தற்போது கப்பலில் வந்துள்ள அரிசியுடன் சேர்த்து ஒதிரண்டு உலர் உணவு பொருள்களும் நிவாரணம் வழங்கப்பட இருப்பதாக செயலகத் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரத்தில் வலி – கிழக்கு, திருநெல்வேலி, கோண்டாவில், நல்லூர் பகுதிகளில் இருந்து சுமார் 10 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

[ஒ-3]

## நீர்வேலி,---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுகின்றன வீடுகள், கொட்டில்கள் அழிந்து போயுள்ளதால் அங்கிருந்த வெங்காயம், புகையிலை பேன்றவை மழையில் நனைந்து ஊறிக் கிடக்கின்றன

நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் பகுதிகள் வெறிச்சோடிய நிலையில் இருப்பதால், அங்கு செல்வதற்கு பீதியாக இருக்கிறது — என்று தெரிவித்தனர்.

இதேவேளை, முறிந்த வாழைக்குலைகளை வெட்டி சைக்கிள்களிலும் லான்ட் மாஸ்ரர்களிலும் பலரும் தென்மராட்சிப் பகுதிக்கு எடுத்துச் செல்கின்றனர்.

"உரிய காலத்துக்கு முன் வெட்டப்பட்ட வாழைக்குலைகளை ஆடு, மாடுகளுக்கு உணவாகத்தான் கொடுக்க முடியும்" — என்று அவர்களில் சிலர் வேதனையுடன் கூறினர்.

மேற்படி பகுதிகளுக்கு நேற்றுச் சென்ற பலரும் எஞ்சிய பொருள்களை எடுத்துக்கொண்டு அவசர அவசரமாகத் திரும்பி வந்தனர்.

(ஒ-13)

## யாழ். மீதான---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படைப் பிரிவுகளை ஒன்றாகச் சேர்த்த அணி யாழ்ப்பாணத்தை எட்டும் தூரத்தில் தயார் நிலையில் உள்ளதாகவும் — இராணுவ அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இரு தரப்பாரும் மோதிக் கொள்ளும்போது குடாநாட்டில் சிக்கியுள்ள லட்சக் கணக்கான பொது மக்களுக்குப் பாரிய சேதங்களும், இழப்புகளும் ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதனையும் — அந்த இராணுவ அதிகாரி ஒப்புக் கொண்டிருக்கிறார்.

யாழ். நகரைக் கைப்பற்றுவதற்கு அரச படைகள் முயலும்போது மிகப் பாரிய எதிர்த்தாக்குதலை எதிர்நோக்க நேரிடும் என்றும் அந்த இராணுவ அதிகாரி கூறுயதாக — வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது.

(அ-த-6-3)

## யாழ். மக்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேலி, நல்லூர் பகுதி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

★ கோப்பாய் பிரதேசசெயலர் அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

★ யாழ். மாவட்டத்தில் திரவப்பணத்துக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் அரச ஊழியர்களும், ஓய்வூதியர்களும் தமது மாதாந்தவேதனத்தைப் பெறமுடியாதுள்ளது.

★ அண்மைய இராணுவ நடவடிக்கையால் அநேகளவு அரச ஊழியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக செயலகத்தில் ஊழியர்களின் வருகை குறைந்துள்ளது.

★ வெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருள்கள் இல்லை.

★ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் இடம்பெயர்ந்த மக்கள் இருப்பிட, உணவு வசதிகள் இன்றி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

(ஒ-3)

## பளைப் பகுதியில் இன்னும் மழை இல்லை

தென்மராட்சி, ஒக். 25

குடாநாட்டில் மழை பெய்யத் தொடங்கியுள்ள போதிலும் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் நேற்றுப் பகல்வரை மழை பெய்யவில்லை. குடாநாட்டின் பல இடங்களிலும் நெல் வயல்களில் நெற்பயிர்கள் பச்சையாகக் காணப்படும் இவ்வேளை, பளைப் பிரதேசத்தில் மழைபெய்யாததால் இன்னமும் நெல் விதைப்பதற்கான உழவு வேலைகள் கூட ஆரம்பிக்க முடியவில்லை என அப்பகுதி விவசாயிகள் பலரும் கவலையுடன் தெரிவித்தனர்.

[ஒ-117]

## மாவுடன் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படையில் மா ஏற்றிவர செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு இணக்கம் தெரிவித்ததை அடுத்து —

மா எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது.

நாளை திருகோணமலையில் இருந்து புறப்படும் இக்கப்பல் மறுநாள் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ஒ 3)

## போர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேரணி நடப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னரே ஐ. நா. சபையின் தலைமைச் செயலகத்துக்கும் —

மற்றும் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் செயலகங்களுக்கும் பேரணியை நடத்தியவர்களின் சார்பில் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த மகஜரிலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பேரணியை ஒழுங்கு செய்தவர்களில் ஒருவரான திரு உருத்திரகுமார் தெரிவித்தார்.

ஐ நா.வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அந்த மகஜரில் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

★ தமிழ் பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

★ தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் வெளிப்பாடாக வடக்கு — கிழக்கு பகுதிகளில் உருவாகிவரும் உணர்வுபூர்வமான தமிழீழ அரசை அங்கீகரிக்க வேண்டும் —

★ ஈழத் தமிழர்களின் ஏகோபித்த பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்க வேண்டும் —

ஆர்ப்பாட்டம்

அமெரிக்கா, கனடா நாடுகளின் பல மாநிலங்களில் இருந்து வந்த தமிழர்கள் ஒன்று கூடி நியுயோர்க்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை $2\frac{1}{2}$ மணித்தியாலயங்களாக ஆர்ப்பாட்டத்தை நடத்திவிட்டு, பின்னர் ஊர்வலமாக ஐ நா. சபைக்கு அருகில் உள்ள தாஜ்மகால் பூங்காவை அடைந்தனர்.

அங்கிருந்து ஆர்ப்பாட்டக் கோஷங்களை எழுப்பிய பின்னர் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

(ஒ-3)

## சூரிய கிரகணத்தை பலரும் பார்த்தனர்

நேற்றுக் காலை இடம்பெற்ற சூரிய கிரகணத்தை யாழ்ப்பாணப் பகுதி மக்கள் பலர் பார்வையிட்டனர்.

சுகாதார சேவைகள் மாகாணம் பிரதிப் பணிப்பாளர் பார்க்கக் கூடாது என பத்திரிகைகள் மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தபோதிலும் பல மக்கள் அதனை புகையூட்டிய கண்ணாடிகள், மற்றும் மறுப்புக் கண்ணாடிகளின் உதவியுடன் பார்வையிட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நேற்றுக் காலை 7.30 மணி முதல் 9.50 மணிவரை பகுதிச் சூரிய கிரகணம் (partial Eclipse) இடம்பெற்றது.

சூரியனின் காற்பங்குமறைக்கப்பட்டு முக்காற்பங்கு பிறை வடிவில் காணப்பட்டு — பின்னர் பிறைவடிவம் படிப்படியாக கீழ் நோக்கியவாறு கழிந்துகாணப்பட்டது

உமது மெதுவாக சந்திரன் விலகி இறுதிநேரத்தில் சந்திரனின் வட்ட அமைப்பும் அரைப் பங்கு தெரியக் கூடியதாக இருந்தது.

இடையிடையே மழை முகில் கூட்டங்கள் மறைத்த போதிலும், பகுதிச் சூரியகிரகணத்தை காலை 9.50 மணி வரை யாழ்ப்பாணத்தில் பார்க்கக் கூடியதாக இருந்தது.

தென்னிலங்கையில் நேற்றுக் காலை 7.44 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் பகுதிச் சூரிய கிரகணம் தென்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

(அ-15-4)

## ஐ. நா. நிகழ்ச்சி ரத்தானது

ஐ நா. தினத்தை ஒட்டி கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் நடைபெற இருந்த வைபவம் பாதுகாப்புக் கருதி ரத்துச்செய்யப்பட்டது.

விடுதலைப்புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்தலாம் என்று அஞ்சியே பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கலந்துகொள்ள இருந்த இந்த வைபவம் ரத்துச்செய்யப்பட்டது என்று அரசாங்க உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-3)

## கொலன்னாவ சம்பவம்; சூத்திரதாரி கைதாம்

கொழும்பு, ஒக். 25

கொலன்னாவ ஊறுகொடவத்த தாக்குதல்களின் சூத்திரதாரியைக் கைது செய்துள்ளதாக பொலீஸார் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆட்களைக் கொண்டுவந்த பின்னர் இந்த சந்தேகநபர் தாக்குதலைத் தலைமை வகித்து நடத்தியதாகவும் —

மேலும் பல சந்தேக நபர்களைக் கைதுசெய்ய வேண்டியிருப்பதால் இவரது பெயரை வெளியிடுவது சாத்தியம் இல்லை எனவும் பிரதிப் பொலீஸ்மா அதிபர் கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

## உயர் அதிகாரிகள் உட்பட மொத்தம் 23 படையினர் பலி

### எண்ணெய்க் குத தாக்குதலில்

கடந்த வாரம் நடந்த கொலன்னாவ — ஊறுகொடவத்த எண்ணெய்க்குதக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 23 என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் உயர் தரத்தைச் சேர்ந்த படை அதிகாரிகள் என்றும்—

கொலன்னாவ எண்ணெய்க் குதப் பாதுகாப்பு குழுவின் பொறுப்பான அதிகாரியும் ஆயுதபாணிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

கொல்லப்பட்ட உயர்தர அதிகாரிகளில் விசேட அதிரடிப்படை உதவி பொலீஸ் அத்தியட்சகர் திஸநாயக்காவும் ஒருவர் ஆவார் (ஒ-3)

## எரிபொருளைச் சேமிக்க பிளாஸ்டிக் தாங்கிகள் வரும்

கொழும்பு, ஒக். 25

எரிபொருள்களை சேமித்துவைக்க பிளாஸ்டிக் தாங்கிகளை வெளிநாட்டில் இருந்து உடனடியாக பெறுவது தொடர்பாக ஆராயப்படுவதாக பெற்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

தற்போது சேதம் அடைந்துள்ள எண்ணெய் தாங்கிகளை திருத்தி அமைக்க ஒரு வருடம் செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் —

இவற்றைத் திருத்துவதற்கு 18 000 கோடி ரூபா தேவை என்றும் — அவர் தெரிவித்துள்ளார். (ஒ-3)

## ஆஸ்பத்திரிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தியசாலை, கோட்டே ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை உட்பட மற்றும் பல பொது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோட்டே ஜெயவர்த்தன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 178 படையினரை நேற்று அமைச்சர் ரிச்சர்ட் பத்திரானாவும், மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் பார்வையிட்டனர்.

"குணமடைந்த பின் நாம் மீண்டும் போர் முனைக்கு செல்ல ஆயத்தமாக இருக்கின்றோம்" என்று சிகிச்சை பெறும் படையினர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

(ஒ-3-4)

## 17 படையினர்,---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

8 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலின்போது அதிகாரி ஒருவர் உட்பட 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் —

42 படையினர் காயம் அடைந்தவர் என்றும் அரசதரப்புச் செய்திகள் தெரிவித்தன.

[ஒ-3-4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சூரிய பிரகாசம்” நடவடிக்கையில்

# 3 அதிகாரிகளும், 149 படையினரும் பலி

## 582 பேருக்கு மேல் காயம்

யாழ்ப்பாணம். ஒக். 25
“சூரிய பிரகாசம்” இராணுவ நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதல்களில் மூன்று அதிகாரிகள் உட்பட 149 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் —

582 படையினர் காயமடைந்ததாகவும் — ஸ்ரீலங்கா அரச தரப்பு கூறுகின்றது.

“சூரிய பிரகாசம்” என்ற பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையில் பெரும் உயிரிழப்புகளையும், படைத்தளபாட இழப்புகளையும் விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த் தாக்குதலில் படையினர் சந்தித்து வருகின்றனர் என்று ‘புலிகளின் குரல்’ தெரிவித்தது.

கடந்த 7 நாட்களில் மட்டும் ஐந்து டாங்கிகள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டுள்ளன 4 டாங்கிகள் கடுமையாக சேதமாக்கப்பட்டுள்ளன. 3 பவள் கவச வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா படையினர் டாங்கிகளையும், கவச வாகனங்களையும் ஷெல் தாக்குதல்களையும் பலமாகக் கொண்டே தற்போதைய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினர் தரப்பில் பலத்த உயிரிழப்பும், காயமடைதலும் அதிகரித்து வருகிறது. அவற்றை அரசு மூடிமறைத்து வருகிறது என்றும் “புலிகளின் குரல்” செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

## உலகத் தலைவர்களுடன் சந்திரிகா சந்திப்பு

நியுயோர்க், ஒக். 25
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து சில உலகத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

இந்தியப் பிரதமர், இந்தோனேசிய ஜனாதிபதி, பாகிஸ்தான் பிரதமர், சீன ஜனாதிபதி, பங்களாதேஷ் பிரதமர் ஆகியோருடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அமெரிக்க ஜனாதிபதி, தென் ஆபிரிக்க ஜனாதிபதி உட்பட ஏனைய உலகத் தலைவர்களையும் அவர் சந்தித்தார்.

இலங்கை நிலைமையை விளக்கிக்கூறிய ஜனாதிபதி தற்போதைய இராணுவத் தாக்குதல் தவிர்க்க முடியாதது என்று விளக்கினாராம்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சாதகமான பதிலை வழங்காததே இதற்குக் காரணமாகும் என்றும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு தமது அரசு உறுதி பூண்டிருக்கிறது என்றும் — ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதான முயற்சிகளைப் பாராட்டியதுடன் அவை வெற்றிபெற வேண்டும் எனவும் வாழ்த்தினார்.

வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஏனைய அதிகாரிகளும் இந்தப் பேச்சுக்களில் சமுகமளித்திருந்தார்கள். (ஒ-8)

## மிதிவெடியில் சிக்கிய பொலீஸார்

கொழும்பு, ஒக். 25
மொனராகலை மாவட்டம் அல்வி மலைப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆயுதபாணிகள் 19 சிங்களவர்களைக்கொலை செய்த சம்பவத்தை கேள்வியுற்று அப்பகுதிக்கு பொலீஸார் சென்ற வேளை பொலீஸார் ஒருவர் ஜொனிமிதி வெடியில் சிக்கினார்.

அவர் தற்போது சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-எ)

## கண்டியிலும் பாதுகாப்பு தீவிரம்

கண்டி, ஒக். 25
கண்டிநகரிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கலகம் தடுக்கும் பொலீஸார் அங்கு நிறுத்தப்பட்டுள்ளனர் —

வாகனங்கள் மற்றும் பொது இடங்கள் சோதனையிடப்பட்டு வருகின்றன. (ஒ-3)

## கோப்பாய் பிரதேச செயலக ஊழியருக்கு

தென்மராட்சி, ஒக். 25
கோப்பாய் பிரதேச செயலகம் இன்று புதன்கிழமை முதல் சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் இயங்க இருப்பதால் ஊழியர்கள் அனைவரையும் கடமைக்குச் சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் திரு. க.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-117)

## முன்னாள் எம்பி துரைரத்தினம் காலமானார்

கொழும்பு, ஒக். 25
தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பருத்தித்துறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் 23 ஆம் திகதி இரவு காலமானார்.

இறக்கும் போது அவருக்கு வயது 65.

20 ஆண்டுகளுக்கு மேலாக அவர் பருத்தித்துறைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னபூரணம் நடராசா

சுதுமலை மத்தியைச் சேர்ந்த திருமதி அன்னபூரணம் நடராசா நேற்றுச் சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் வைத்தியகலாநிதி மா. நடராசாவின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி கணேஸ்வரன் [மானிப்பாய்], காலஞ்சென்றவர்களான தர்மானந்தராசா, சரோஜினிதேவி, சொர்ணலீலா, மற்றும் சித்திரலேகா [பண்டாரவளை], நளாயினிதேவி, ஜெயபாலஜெளரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவஞானேஸ்வரிஅம்மாள், சாகினி (கனடா), வைத்தியகலாநிதி உரோமகேஸ்வரன் (ஆயுர்வேத மாகாணப் பணிப்பாளர்), கருணாகரன் (பண்டாரவளை], கனகசுந்தரம் [பொறியிலாளர், செயற்திட்ட அதிகாரி], சசீதரா [கனடா], ஜெயகுமாரன், (ஜேர்மனி] ஆகியோரின் மாமியாரும், வைத்திய கலாநிதி ஜீவானந்தம், ஜீவராணி [கனடா], ஜீவராஜ், பராசக்தி, ஜீவகுமார், ஜீவானந்தி, சிராணி, சுரேன் [ஜேர்மனி], புவனலோஜனி [மாணவி, சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி], சிறீகுமார் I. B.S., கொழும்பு], ஹேமமாலினி [மாணவி, இந்து மகளிர் கல்லூரி மானிப்பாய்], துஷ்யந்தன் (மாணவன், மானிப்பாய் இந்துக்கல்லூரி], பிரதீப், அமலராஜ், வினுயா [கனடா], கிரோஜி [கனடா], கிரோஷன் [கனடா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை [26-10-95] வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. நடராசா
(கணவர்)

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.
[39130]

## கந்தையா கந்தப்பு
[இளைப்பாறிய ஆசிரியர்]

நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் கந்தையா கந்தப்பு நேற்று [24-10-95] காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி இராசம்மா [இளைப்பாறிய ஆசிரியை] அவர்களது அன்புக் கணவரும், திருமதி அம்பிகாதேவி, மஞ்சுளாதேவி [ஆசிரியை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி], கலாதரன் [பொறியியலாளர், கனடா], கலாவதி [காசாளர், கொழும்பு], கமலினி [தட்டெழுத்தாளர், கிளிநொச்சி], ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கந்தப்பு கிருஷ்ணமூர்த்தியின் (சவூதி அரேபியா) மாமனாரும், அனுசாந்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [25-10-95] புதன்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
[குடும்பத்தினர்]

முருகமூர்த்திகோயில் வீதி,
நெல்லியடி.
[39131]

## செல்வி லீலாவதி சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற விகிதர், சுகாதார திணைக்களம், ‘யாழ்’ போதனா வைத்தியசாலை]

சேர் பொன் இராமநாதன் வீதியைச் சேர்ந்த செல்வி லீலாவதி சுப்பிரமணியம் [சுகாதாரத் திணைக்களம், யாழ். போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் முன்னாள் விகிதர்) நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் விசாலாட்சி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், பத்மநாதன், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் ஆனந்தராசா, விஜயரட்ணம் [கியூபாஸ்) திருமதி பாலசுப்பிரமணியம் [தொழில்நுட்பக் கல்லூரி] ஆகியோரின் சகோதரியும், மீனாட்சி, சிவமணி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும், இரவீந்திரன், பாமினி, ரஜனி, புவீந்திரன், தாரணி ஆகியோரின் மாமியும், முகுந்தன், காலஞ்சென்ற முகுந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25-10-95) காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. பா. முகுந்தன்

194, சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(39132)

## தம்பையா சண்முகம்
(சித்தப்பா – Safety Travels)

புளியங்கூடலைச் சேர்ந்த தம்பையா சண்முகம் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பையா – முத்தாச்சி தம்பதியினரின் மூத்த புதல்வரும், தில்லையம்பாவின் அன்புக் கணவரும், ஜெயலக்சுமி, ஜெயகௌரி, ஜெயராணி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விசாகரட்ணம், பாலசிங்கம், அரசரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு. கோபாலபிள்ளை
(மைத்துனர்)

196, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
[39134]

(6)

# புதிய பெரடேனியா இன்ஸ்ரிரியூட்

K K.S வீதி, 2x12.5 கொக்குவில்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

கலை முதற் தேர்வு (G. A. Q.) 95 / 96
கல்வியாண்டிற்கு உரிய வகுப்புகள் ஆரம்பம்

27 - 10 - 1995 மாலை 3 மணி

| | |
|---|---|
| மெய்யியல் | — திரு. யுகபாலசிங்கம் |
| தமிழ் | — திரு. சி. கணேசலிங்கம் |
| அரசியல் | — திரு. தர்மானந்தசிவம் |
| பொருளியல் | — திரு. அருள் |
| இந்துநாகரிகம் | — கலாநிதி கரை. சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. சண்முகராஜா (சண்) |

25 21 25 50 525

குறிப்பு:
சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் வகுப்புக்கள் நடைபெறும்.
நேர அட்டவணையினைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.
(சி-2530)

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் வாமதேவா
(இளைப்பாறிய இலங்கை வங்கி முகாமையாளர்)

கன்னாகத்தைச் சேர்ந்தவரும், தற்போது கோயிலாக்கண்டி மறவன்புலோவில் வசித்தவருமான மயில்வாகனம் வாமதேவா நேற்று செவ்வாய்க்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-10-95) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறவன்புலோவில் உள்ள அவர்களின் வசிப்பிடத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. பாலகுமார்
(சகோதரர்)

[39135]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25- 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org